முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 736**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.10.2021, திங்கட்கிழமை

1. பார்காக்க வந்த அரங்க ஞானி
   பண்பானவர்களை உருவாக்கி கலியுகம் மீட்க
   கார்மேகமாய் கருணைபட இரங்கி அருளும்
   கலியுகத்தின் கந்தமகா என் சக்தியான ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
   ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   இனிமைபட ஞானஅறிவுரை ஆசியை
   இயம்பிடுவேன் பிலவ நங்கை திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கன் தர்மமே உலகை காக்கும்
   தவசி உன் கொள்கையே உலகோரை மீட்கும்
   அண்ணலே என உன் கரம்பட ஆசி பெற்ற
   அன்பர்கள் மூலமாக உலகமாற்றம் நடக்கும்
4. நடக்கவே ஞானத்தலைவன் யான்
   ஞானமாக நாடெங்கிலும் சூட்சும சக்தியாக
   தடையின்றி உலகமெங்கும் பரவி
   தவராஜன் உன் தொண்டர்களை பெருக்கிவர
5. வருகின்ற சமூகம் அரங்கன் ஆசியாலே
   வடிவேலன் என் வழிபாட்டாலே உயரும்
   தருகின்ற அரங்கன் தர்மம் உலகமெல்லாம் பரவி
   தரணியோரை தயவுமிக்கவர்களாக ஆக்கி
6. ஆக்கியே அரங்கன் தேடலின் மூலமாக
   அனைத்துபேரும் ஞானிகளாக உருவெடுக்கப்பட்டு
   துணிவுமிக்க ஞானவான்கள் ஆளுகின்ற
   தூயஞான ஆட்சிக்காலமாக இந்த உலகம் சடுதி மாறும்
7. மாறுதலை செய்யவே அரங்க மகானுக்குள்
   மகத்துவத்தை சுப்ரமணியர் யானும் நித்தம் நித்தம்
   ஆறுதலாக அற்புதம்பட நடத்திவர
   ஆற்றல்பட கலியுகம் சடுதி ஞான யுகமாக மாற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–